# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ **அதி விசேஷமானது**

අංක 2273/34 – 2022 මාර්තු මස 29 වැනි අඟහරුවාදා – 2022.03.29

***2273/34 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை***

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

***2022 ஆம் ஆண்டின் 93 ஆம் இலக்கக் கட்டளை***

*எனது குறிப்பு இல. 4-3/13/2020/PC/287.*
*பி . செ. கு. இல. : ஒஅ/5/1/279.*

*காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இங்கு கீழ் விபரிக்கப்பட்டுள்ள அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*எஸ். எம். சந்திரசேன,*
*காணி அமைச்சர்.*

*காணி அமைச்சு,*
*1200/6, "மிஹிகத மெதுர",*
*ரஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2022, மாச்சு 29.*

**அட்டவணை**

*1.* **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், பாணந்துறை.

*2.* **காணியின் விபரம்**: மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 689 கலுதேவல கிராம அலுவலர் பிரிவில், கலுதேவல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 2021.03.25 ஆந் திகதிய, Ka/PAN/2021/114 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்ட கீழ்வரும் பெயர் விஸ்தீரணங்களையும் கொண்ட பின்வரும் காணித் துண்டு:

*01.* **துண்டு 'A' - எளுவில வெல - விஸ்தீரணம்: சுமார் *1.1924* ஹெக்டயார்**

வடக்கு : துண்டு B; கிழக்கு : மேல்வத்தை வீதி, பர்ட்டி பர்னாந்து, தனபால பொன்சேக்கா உரிமை கோரும் மெல்மியர் வத்தை மற்றும் ருக்மல் மொரமுதலி உரிமைகோரும் தவட்டகஹவத்தை; தெற்கு: பர்ட்டி பர்னாந்து தனபால பொன்சேக்கா உரிமை கோரும் மெல்மியர் வத்தை மற்றும் ருக்மல் மொரமுதலி உரிமை கோரும் தவட்டகஹவத்தை மற்றும் ஊஷா தமயந்தி அபேவர்தன விஜேநாயக்க உரிமை கோரும் எளுவில வெல; மேற்கு : சைமன் சில்வா, சார்லிஸ் சில்வா மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் எளுவில வெல.

*02.* **துண்டு 'B' - எளுவில வெல - விஸ்தீரணம்: சுமார் *0.0104* ஹெக்டயார்**

வடக்கு : கால்வாய் ; கிழக்கு : மேல்வத்தை வீதி; தெற்கு: துண்டு A ; மேற்கு : சைமன் சில்வா, சார்லிஸ் சில்வா மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் எளுவில வெல.

EOG 03 - 1050